தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் அமைச்சர் மறைந்த ஆலடி அருணா அவர்களின் மகன் ஆலடி எழில்வாணன் எழுதிய "அவர்தான் கலைஞர்' புத்தகத்தை வெளியிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், நூலாசிரியர் ஆலடி எழில்வாணன், எம்ரால்டு பதிப்பகம் உரிமையாளர் முனைவர் ஒளி வண்ணன் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2024) தலைமைச் செயலகத்தில், கொடி நாளையொட்டி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே அவர்களிடம் கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத்துறை துணைச் செயலாளர் பவன்குமார் க.கிரியப்பனவர், முன்னாள் படைவீரர் நல இணை இயக்குநர் மேஜர் சுரேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

பல்துறை ஒன்றியக் குழுவிடம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பாதிப்புகளின் அளவு மற்றும் மறுசீரமைப்பின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, இடைக்கால நிவாரணமாக 2000 கோடி ரூபாயினை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி கேட்டுக் கொண்டதோடு, உடனடியாக ஒன்றிய பல்துறை குழுவினை அனுப்பி சேத விவரங்களை கணக்கிடவும் கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தார்.

அதைத் தொடர்ந்து 3.12.2024 அன்று காலை இந்திய பிரதமர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தற்போது ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்து, இந்த இயற்கை பேரிடரின் விளைவுகளை சமாளிக்க மாநிலத்திற்கு இடைக்கால நிவாரணமாக 2000 கோடி ரூபாயை உடனடியாக விடுவித்திட வேண்டும் என்றும், ஒன்றிய குழுவினை சேத மதிப்பீடுகள் மேற்கொள்ள விரைந்து அனுப்பி வைத்திடுமாறும் மீண்டும் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் துரித மீட்பு நடவடிக்கைகளினால் ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் இயல்பு வாழ்க்கை விரைந்து மீண்டு வருகின்றது.

முதலமைச்சர் அவர்கள் 3.12.2024 அன்று அதிகனமழையின் காரணமாக கடுமையான மழைப்பொழிவினை சந்தித்த விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூபாய் 2 ஆயிரம் வழங்கிடவும்; ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் வழங்கிடவும்; சேதமடைந்த குடிசைகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரம் வழங்கிடவும்; முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை அளித்திடவும், மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 17 ஆயிரம் வழங்கிடவும்; பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் சேதமுற்றிருப்பின் (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 22,500/- வழங்கிடவும்; மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) மானா வாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500/- வழங்கிடவும், கால்நடை இழப்பிற்கும் நிவாரணம் அறிவித்து உத்தரவிட்டார். அதன்படி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒன்றிய பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் முனைவர் இராஜேஷ் குப்தா அவர்களது தலைமையிலான பல்துறை ஒன்றிய குழுவினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இன்றையதினம் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய குழுவிடம் ஃபெஞ்சல் புயலின் தற்காலிக மற்றும் நிரந்தர மறு சீரமைப்புப் பணிகளுக்கு 6675 கோடி ரூபாய் வழங்கிட வேண்டி முழு விவரங்கள் அடங்கிய கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார். மேலும், ஒன்றிய குழுவிடம் தமிழ்நாட்டிற்கு தேவையான நிவாரணப் பணிகள், நிரந்தர மற்றும் தற்காலிக மறு சீரமைப்புப் பணிகளுக்காக நிதியினை பெற்றுத்தர விரைந்து பரிந்துரைத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோர் ஒன்றிய குழுவிடம் ஃபெஞ்சல் புயல் சேத விவரங்கள் குறித்து விளக்கப் படக் காட்சி மூலம் விளக்கினார்கள். முக்கிய அரசுத் துறை செயலாளர்கள் உடன் கலந்து ஆலோசித்து ஒன்றியக் குழுவினர் மாவட்டங்களுக்கு கள ஆய்வு செல்வது பற்றி முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி ஒன்றிய குழுவினர் 7.12.2024 மற்றும் 8.12.2024 ஆகிய தேதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புயல் மற்றும் வெள்ள சேதத்தினை பார்வையிட உள்ளனர். கள ஆய்வினை ஒருங்கிணைக்க மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்கனவே தங்கி முன்னேற்றப்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், வேளாண்மை - உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆம்னி பேருந்து நிலையம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்திற்கு தினந்தோறும் வருகை தரும் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட வணிகர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுவர்.

இம்மருத்துவ சிகிச்சை மையத்தை தகுந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கொண்டு திறம்பட செயல்படுத்திட அப்போலோ மருத்துவ குழுமம் முன்வந்துள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் மொத்தம் 58 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, அப்பல்லோ மருத்துவமனையின் துணைத் தலைவர் திருமதி ப்ரித்தா ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூரிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண் ராஜ், தமிழ்நாடு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஏ.அப்சல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில்

ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு புதிய ரேஷன் அட்டைகள்!

சென்னை, டிச. 8 – தமிழ்நாட்டில் புதிதாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு புதிய ரேஷன் அட்டை வழங்கப்பட்டு வருவதாக, உணவுப்பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

நியாய விலைக் கடைகளில் கிடைக்கும் அத்தியாவசிய பொருட்கள் மட்டுமின்றி, அரசின் பல்வேறு திட்டங்களுக்கும் குடும்ப அட்டை அவசியமானதாக உள்ளது.

இந்நிலையில், புதிய ரேஷன் அட்டை கோரி, சுமார் 2 லட்சத்து 89 ஆயிரத்து 591 பேர் விண்ணப்பித்துள்ளதாக, உணவு பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது. அதன்படி, விண்ணப்பித்தவர்களில் ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 500 நபர்களுக்கு புதிய ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், புதிய ரேஷன் அட்டைக்கோரி விண்ணப்பித்துள்ளவர்களில், 1 லட்சத்து 28 ஆயிரத்து 373 நபர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், 6 ஆயிரத்து 640 நபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக விண்ணப்பித்த தகுதி வாய்ந்த அனைவருக்கும் விரைவில் ரேஷன் அட்டை வழங்கப்படும் என்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

பா.ஜ.க. ஆளும்

குஜராத்தில் போலி மருத்துவ வாரியம்!

போலிச் சான்றிதழ்கள் விற்பனை!

காந்திநகர், டிச. 8 - போலி நீதிமன்றத்தைத் தொடர்ந்து குஜராத்தில் போலி மருத்துவ வாரியம் நடத்தப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குஜராத்தில் போலி நீதிமன்றம், போலி அரசு அலுவலகத்தைத் தொடர்ந்து தற்போது போலி மருத்துவ வாரியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சூரத் நகரில் ஒரு கும்பல் போலி மருத்துவ வாரியம் ஒன்றை சொந்தமாக நடத்தி வந்துள்ளனர்.

இதுதொடர்பான தகவல் அடிப்படையில் சூரத் நகரில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் காவல்துறையினர் சோதனை நடத்தினர். அப்போது, அந்த மருத்துவமனையை நடத்தி வரும் மருத்துவர்கள் காண்பித்த பட்டப்படிப்பு சான்றிதழ்கள் போலியானது என்பது தெரிய வந்தது.

பி.இ.எச்.எம். மருத்துவ படிப்புக்கான பட்டப் படிப்புக் குஜராத்தில் இல்லாத நிலையில், அவர்கள் காண்பித்த மருத்துவப்பட்டப் படிப்பு சான்றிதழ் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. அப்போது, மருத்துவ படிப்புக்கான சான்றிதழை டாக்டர் ராவத் மற்றும் ராஜேஷ் குஜராத்தி ஆகியோர் விற்பனை செய்தது தெரிய வந்தது. எலக்ட்ரோ ஹோமியோபதி போர்டு என்ற ஒன்றை தனியாக தொடங்கி அதன் மூலம் போலிச் சான்றிதழ்களை 70 ஆயிரத்துக்கு இவர்கள் விற்பனை செய்துள்ளதும் தற்போது தெரிய வந்துள்ளது.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று (07.12.2024) திருச்சிராப்பள்ளி உறையூர் நகர்நல மையத்தில் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ பல்துறை பரிசோதனை முகாமைத் தொடங்கி வைத்து முகாமைப் பார்வையிட்டு பயனாளிக்கு தாய்சேய் நல பெட்டகம் வழங்கி தூய்மைப் பணியாளர்கள் சிறப்பான முறையில் பணிகளை மேற்கொள்ள பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் 20 அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்களில்

18,81,079 புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்து திராவிட மாடல் அரசு சாதனை!

அமைச்சர் சி.வி. கணேசன் பெருமிதம்!

சென்னை, டிச.8- தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைக்கும் போதெல்லாம் தொழிலாளர்களின் உரிமைகளையும் வாழ்நிலையையும் உயர்த்துவதில் தனிக் கவனம் செலுத்திச் செயலாற்றி வருகிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் பொறுப்பேற்ற பிறகுதான் முதன்முதலாக தனியே தொழிலாளர் நலத் துறையையும், தொழிலாளர் நல அமைச்சகமும் ஏற்படுத்தப்பட்டன.

தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்த உதவியாக 1971ஆம் ஆண்டு தொழிலாளர் நலவாரியத்தை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தினார் கலைஞர். அவ்வழியில் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பிறகு இந்தத் திராவிட மாடல் அரசு தொழிலாளர்கள் நலனில் அக்கறைக் கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, அமைப்பு சாரா தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகக் கடந்த மூன்றரை ஆண்டுகளில், 20 அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களில் 18,81,079 புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களில் பதிவுப்பெற்றுள்ள 25,35,546 உறுப்பினர்களுக்கு 2,106 கோடி ரூபாய் வரையிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

மேலும் அமைப்புசாரா தொழிலாளர்கள் வாரிய உறுப்பினர்களின் ஓய்வூதியம் 1000 ரூபாயிலிருந்து 1200 ரூபாயாக உயர்த்தி வழங்கினார் முதலமைச்சர். தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்காகச் சிரத்தையுடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் திராவிடமாடல் அரசு அவர்களின் உரிமைகளைக் காப்பதிலும், அவர்களுக்கான நலத் திட்டங்களை வகுப்பதிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர்களுக்கு தோழனாய் பாதுகாவலனாய் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் நமது முதல்வர் என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

மும்பை, கலைஞர் தமிழ்ச்சங்கம் சார்பில் நடைபெறவுள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள நேற்று (07.12.2024) மும்பை சென்ற கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோருக்கு மும்பை விமான நிலையத்தில் மும்பை, கலைஞர் தமிழ்ச்சங்கம் சார்பில், நிறுவனர் சேசுராஜா தலைமையில் கழகத்தினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.